**ஜா-எல நகர சபை - 2023**

**-----------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

ஜா-எல நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான கூற்று, வருமானம் தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ஜா-எல நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்தவில்லை. இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்தை வழங்குவதற்கு அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக மறுக்கப்பட்ட அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்வதன் அடிப்படையில் இந் நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகவுள்ள பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன்.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின், இந்த அறிக்கையின் 1.6 பந்திகளின் அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் இலக்கம் 3.28 இன் மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.2 இற்கு இணங்க செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் மூலமான காசுப்பாய்ச்சலை கணிக்கும் போது முன்னைய ஆண்டுகளின் வழுக்களுக்காக திரண்ட நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட சீராக்கல்களின் வித்தியாசமான ரூபா 3,196,691 தொகை மிகையாக கழிக்கப்பட்டிருந்ததுடன் பெறுமானத்தேய்வு என ரூபா 13,620,777 தொகையும் முதலீட்டு வருமானம் என ரூபா 22,762,782 தொகையும் சீராக்கல் செய்யப்பட்டது. | நியமம் மற்றும் அதன் பின்னிணைப்பில் விளக்கம் அளித்தல் மற்றும் வழிகாட்டலுக்கு இணங்க அடுத்த ஆண்டு முதல் கணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நியமத்தின் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நியமத்தின் இலக்கம் 3.29 இன் மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.3 இற்கு இணங்க முதலீட்டுத் தொழிற்பாடுகளின் மூலமான காசுப்பாய்ச்சலை கணிக்கும் போது ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தல் என ரூபா 56,925,735 தொகையும் நிலையான வைப்புக்களில் பணமாக முதலீடு செய்யப்பட்ட பெறுமதி என ரூபா 86,142,921 தொகையும் நிலையான வைப்புக்களில் பணமாக கிடைக்கப்பெற்ற வட்டியின் பெறுமதி ரூபா 2,914,450 தொகை மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | இலக்கம் 3.30 இன் மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.4 இற்கு இணங்க செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் மூலமான காசுப்பாய்ச்சலை கணிக்கும் போது மீளாய்வாண்டின் போது பணமாக கிடைக்கப்பெற்ற மூலதனச் செலவு மானியம் ரூபா 13,816,894 தொகையாக காணப்பட வேண்டியிருந்த போதிலும் அது ரூபா 13,828,611 தொகையென ரூபா 11,717 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | நியமத்திற்கான பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.5 இற்கு இணங்க காசு மற்றும் காசுக்கு சமமானவையின் கீழ் வருட இறுதியில் காசு மற்றும் சமமானவைகளின் மீதி என ரூபா 42,330,279 தொகை காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 42,300,483 தொகை என ரூபா 29,796 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | நியமத்தின் இலக்கம் 18.7 மற்றும் 2021 பெப்ரவரி 01 திகதிய LGD/10A/4/ந.கி/2019 இலக்கம் கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்திற்கு இணங்க அனைத்துச் சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட | 2024 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படும் என. | அனைத்து சொத்துக்களும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்த போதிலும், சபைக்குச் சொந்தமான ஏட்டுப் பெறுமதி ரூபா 346,886 தொகைக்கான 200 காணித் துண்டுகள், இயந்திர உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களை இனங்கண்டு மீள்மதிப்பீடு செய்திருக்கவில்லை. | | |
| (ஊ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 2020 ஆகஸ்ட் 27 திகதிய LGD/09/2019(1) இலக்க சுற்றறிக்கைக்கு இணங்க காணிகள், கட்டிடங்கள், வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள், பாதைகள், மதகுகள் மற்றும் பாலங்கள் மற்றும் தளபாடங்கள் / உபகரணங்கள் மற்றும் ஏனைய பதிவுகள் தொடர்பான படிவம் எல்.ஜி.23/1, 23/2,23/3,23/4, மற்றும் 23/5 முறையே பயன்படுத்தியிருக்கவில்லை. | 2024 இறுதிக் கணக்குகள் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய படிவங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 424 பாதைகளில் 405 பாதைகளின் பெறுமதியினை மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024 ஆண்டின் போது மூலதனச் சொத்துக்கள் என கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அனைத்து சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை கணினி மென்பொருள் பெறுமானத் தேய்வுப் பெறுமதியாகிய ரூபா 2,211,768 தொகை திரண்ட நிதியத்திற்கு ரூபா 1,639,893 தொகை என சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | தவறுதலாக பெறுமானத் தேய்வு சீராக்கல் மேற்கொள்ள முடியாமல் போனது. அதனை 2024 கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெறுமானத் தேய்வு சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கட்டிட திருத்த வேலைச் செலவு ரூபா 2,419,500 தொகை மீளாய்வாண்டின் கட்டிடங்களின் நடைமுறை வேலையின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | அடுத்த வருடம் சரி செய்யப்படும் என. | கணக்குகள் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2022 ஆண்டிற்குரிய கிடைத்திருந்த வட்டி வருமானம் ரூபா 8,265,605 தொகை மீளாய்வாண்டின் வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 13,084,060 இற்கான மூலதனச் செலவு மானியம் அகல்விரிவான வருமானக் கூற்றில் ரூபா 13,828,611 தொகை என ரூபா 744,551 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டு இந்த வழு மீண்டும் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணக்காய்வு கட்டணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக மிகையாக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2,378,139 தொகை கடன்கொடுத்தோர் மிகை ஒதுக்கம் என பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (எ) | 2023 திசெம்பர் 31 திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்த 4 செயற்திட்டங்களின் கூட்டுத்தொகை ரூபா 3,218,117 தொகை பாதைகள், பாலங்கள், மதகுகளின் பெறுமதி என கணக்கீடு செய்வதற்கு பதிலாக அந்த செயற்திட்டங்களின் மதிப்பீட்டுப் பெறுமதியின் கூட்டுத்தொகையாகிய ரூபா 3,595,000 தொகை நடைமுறை வேலைகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்பட்டிருந்த கணக்கீட்டு வழுவை சரி செய்யப்படும் என. | - மேற்படி - |
| (ஏ) | வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத 05 செயற்திட்ட வேலைகளின் கூட்டுத்தொகை ரூபா 8,700,000 தொகை நடைமுறை வேலைகள் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023.12.31 வரை மேல் மாகாண ஆளுனரின் அங்கீகாரம் கிடைத்திருக்காமையால் கடன் கொடுத்தோரின் கீழ் உட்படுத்தப்படவில்லை என. | - மேற்படி - |
| (ஐ) | 03 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 1,835,294 தொகை மூலதனப்படுத்துவதற்கு பதிலாக மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தவறுதலாக மீளாய்வாண்டின் செலவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது என. | - மேற்படி - |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் அடங்கியுள்ள 4 கணக்கு மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய அட்டவணைகளின் கூட்டுத்தொகை இடையே ரூபா 13,501,502 தொகைக்கான இணக்கமின்மை ஒன்று காணப்பட்டது. | இதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | வித்தியாசத்திற்கான காரணங்களை கண்டு சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகள் மற்றும் | பெற வேண்டிய கடை வாடகை மற்றும் இருப்பு வித்தியாசம் தற்போது சரி செய்யப்பட்டுள்ளது என. | வித்தியாசங்கள் ஏற்படாதவாறு கட்டுப்பாடுகள் போடப்பட வேண்டும். |

சபையில் காணப்பட்ட ஆவனங்கள், கணினி மென்பொருள்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கையின் படி 05 கணக்கு மீதிகளுக்கிடையே ரூபா 3,919,204 இற்கான மற்றும் பெற வேண்டிய கடை வாடகைப் பெறுமதியில் ரூபா 3,043,520 இற்கான இணங்கப்படாத வித்தியாசங்கள் ஒன்று காணப்பட்டது.

**1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| விடயம் | தொகை<br>ரூபா. | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 23,988,022 | விரிவான அட்டவணை | 2024 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது கணக்குகளுக்கு சீராக்கல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் VII ஆவது அத்தியாயத்தின் பந்தி 38(2) | நிதிக் கட்டுப்பாட்டுக்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுகின்றது எனவும், அந்த முறைமையை தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமை வெற்றிகரமாக நடாத்திச் செல்லப்படுவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் | 2024 ஆண்டு முதல் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | குறிப்பிட்ட சட்டத்தின் படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிறைவேற்றப்பட வேண்டிய எழுத்துமூல மீளாய்வொன்றின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | நகர சபை நிதி நிருவாகத்திற்குரிய கணக்கு அலுவல்கள் தொடர்பான விதி 13 மற்றும் 14 மற்றும் நிதிப் பிரமாணங்கள் 104 மற்றும் 105 | 2021 திசெம்பர் 31 திகதி முதல் 2023 ஜுலை 05 திகதி வரை சேதனப் பசளை விற்பனையின் மூலம் கிடைத்திருந்த ரூபா 348,600 இற்கான முறைகேடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்பட்டிருந்த பற்றாக்குறைத் தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட விதி மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | I. நி.பி.571 | கூட்டுப்பெறுமதி ரூபா 3,162,080 தொகைக்கான 2 வருடங்களை மிகைத்துள்ள வைப்புக்களை ஆதனவழிப்புச் செய்திருக்கவில்லை. | ரூபா 3,162,080 இற்கான மீதி தடுத்து வைக்கப்பட வேண்டும் எனவும், குறிப்பிட்ட பிரிவு மற்றும் விடய உத்தியோகத்தர் குறிப்பிடப்பட்டுள்ளது என. | குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| | II. நி.பி. 571(5) | 2012 மற்றும் 2015 ஆண்டுகளின் போது 02 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 158,749 தொகைக்கான முற்பணங்கள் 2023 திசெம்பர் 31 திகதி அளவிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 383,340.84 தொகை பணமாக எதிரீடு செய்வதற்கும் அங்கீகாரம் கிடைத்துள்ளது என மற்றும் ரூபா 5,000 தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும். | - மேற்படி - |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 | 14 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |
| (உ) | உள்ளுராட்சி ஆணையாளரின் 2020 ஆகஸ்ட் 24 திகதி LGD/09/2019(1) சுற்றறிக்கை | எல்.ஜி. 21/2 படிவத்தில் காட்டப்பட்டுள்ளவாறு மாகாண அரச உத்தியோகத்தர்களின் முற்பண “பீ” கணக்குகளின் எல்லைகள் அங்கீகரித்துக்கொள்ளப்பட | 2024 ஆண்டிற்கான பாதீடு தயாரிக்கும் போது எல்லைகள் உட்படுத்தப்பட்டுள்ளது. | - மேற்படி - |

வேண்டியிருந்த போதிலும் இந்த சபையினால் முற்பணக் கணக்கு எல்லைகள் அங்கீகரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 142,785,008 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 25,390,606 தொகையாக இருந்தது.

## 2. வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 48,802 | 48,635 | 36,325 | 12,310 | 46,330 | 46,185 | 38,687 | 54,320 |
| (ii) | வாடகை | 19,606 | 20,494 | 13,343 | 7,151 | 22,597 | 17,666 | 21,143 | 13,655 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 3,203 | 1,241 | 1,241 | - | 1,200 | 443 | 482 | (39) |
| (iv) | ஏனைய வரு மானங்கள் | 117,104 | - | 117,104 | - | 93,409 | 18,773 | 18,868 | (96) |
| | | 188,715 | 70,370 | 168,013 | 19,461 | 163,536 | 83,067 | 79,180 | 67,840 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் மதிப்பீட்டு ஏனைய வருமானங்கள் ரூபா 117,104,000 தொகை எனினும் ஆண்டின் போது அவற்றில் எதுவித தொகையும் சிட்டையிடப்பட்டு அல்லது அறவீடு செய்திருக்கவில்லை. | சேவைப் பெறுனரின் தேவைப்பாட்டின் மீது வழங்கப்படுகின்ற சேவைக்காக சிட்டையிடப்படல் மேற்கொள்ளப்படாததுடன், சேகரிக்கப்பட்ட வருமானமே சிட்டையிடப்பட்ட வருமானம் ஆகும் என. | தத்துருபமாக மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2023 செப்தம்பர் 25 திகதியில் உள்ளவாறு 46 அலகுகள் தொடர்பான நிலுவை வியாபார வரி, கைத்தொழில் வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 79,000 தொகையாக இருந்தது. | அனைத்து நிலுவை தொகைகளும் அறவிடப்பட்டு 11 வர்த்தக நிலையங்களுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது என. | - மேற்படி - |
| (இ) | வருமானப் பரிசோதகர்களினால் கட்டணம் கணிக்கப்பட்டு காட்டப்பட்டிருந்த 27 சந்தர்ப்பங்கள் தொடர்பாக ரூபா 108,000 தொடர்பான விளம்பர அறிவித்தல் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | தவறுதலாக வேறு கோப்பு ஒன்றில் கோப்பிடப்பட்டிருந்ததுடன், தற்போது குறிப்பிட்ட கட்டணங்கள் அனைத்தும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டுள்ள கருமங்களை மேற்கொள்ளல்

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) துணைச் சட்டங்கள்** | | |
| நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 153 இற்கு இணங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்காத துணைச் சட்டங்கள் காலத்திற்கு காலம் சட்டவாக்கம் செய்ய முடியுமாக இருந்த போதிலும் மற்றும் அந்த கட்டளைச் சட்டத்தின் 157(II) இற்கு இணங்க பொது மற்றும் தனிப்பட்ட சந்தைகள் மற்றும் சந்தைகளை நடாத்துதல், கட்டணம் அறவீடு செய்தல், ஒதுக்குவதற்கான துணைச் சட்டங்கள் ஆக்க முடியுமாக இருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான கடையறைகளை வாடகைக்கு கொடுத்தலை முறைப்படுத்துதல் மற்றும் ஒழுங்குறுத்தலுக்கான துணைச் சட்டங்கள் தயாரித்திருக்கவில்லை. | துணைச் சட்டங்கள் தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | துணைச் சட்டங்கள் சட்டவாக்கம் செய்ய வேண்டும். |
| **(ஆ) பொது மக்கள் பிரதிநிதித்துவம்** | | |
| 2023 ஆண்டுகளின் போது கிடைத்திருந்த பொதுமக்கள் முறைப்பாடுகளில் 02 பொது மக்கள் முறைப்பாடுகள், 04 ஆபத்தான மரங்கள் மற்றும் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பான முறைப்பாடுகள் 04 வீதமும் 2023 செப்தம்பர் 19 திகதி வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | கூடிய விரைவில் தீர்வுகள் வழங்கப்பட வேண்டும். |
| **(இ) சுற்றாடல் சிக்கல்கள்** | | |
| I. சபையினால் சேதனப் பசளை செயற்களம் நடாத்தப்பட்டு வருகின்ற சுதுவெல்லையில் அமைந்துள்ள 11 ஏக்கர் 1 ரூட் 19.20 பர்சஸ் தொகைக்கான சபைக்குச் சொந்தமான காணியொன்றில் உக்காத கழிவுப் பொருட்களை முறைசாரா விதமாக அப்புறப்படுத்தல் மேற்கொள்ளப்படுவதனால் மழைக் காலங்களில் தண்ணீர் காணப்படுகின்றது எனவும், மிருகங்கள் அந்த வளவில் நடமாடுகின்றன எனவும் அவதானிக்கப்பட்டதுடன், அவை பொது மக்களின் சுகாதாரத்திற்கு மற்றும் சுற்றாடலுக்கு சவாலாக இருந்தது. | - மேற்படி - | பொதுமக்கள் சுகாதாரம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| II. | 2022 ஜனவரி 27 திகதிய இலக்கம் 2264/18 கொண்ட வர்த்தமானி அறிவித்திலின் படி சபையினால் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டிய நிறுவனங்களை இனங்காண்பதற்காக 2023 ஆண்டில் கணிப்பீடொன்று மேற்கொண்டிருக்காததுடன், அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டியவை என இனங்காணப்பட்டிருந்த 06 புதிய நிறுவனங்களில் ஒரு நிறுவனத்திற்கு மாத்திரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக முறையான ஒழுங்குறுத்தல் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| III. | 06 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த சுற்றாடல் அனுமதிப்பத்திரம் காலவதியாக இருந்த போதிலும் அந்த நிறுவனங்களுக்கு மீண்டும் புதிய அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதலளிக்கப்பட்டிருக்கவில்லை. | கூடிய விரைவில் தீர்வு வழங்கப்பட வேண்டும். |
| IV. | 2019, 2021 மற்றும் 2023 ஆண்டுகளின் போது நடாத்தப்பட்டிருந்த சுற்றாடல் அனுமதிப்பத்திர குழுவினால் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டு என காட்டப்பட்டிருந்த 09 நிறுவனங்களுக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதலளிக்கப்பட்டிருக்கவில்லை. | கூடிய விரைவில் தீர்வு வழங்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தகனம் செய்தல் மற்றும் அடக்கம் செய்தல் அலுவல்களுக்கான கட்டணங்கள் திருத்தப்படாமல் 07 வருட காலத்தை விட பழமை வாய்ந்த கட்டணம் அறவீடு செய்தல் மேற்கொள்ளப்படுவதுடன், விண்ணப்பம் ஒன்று சமர்ப்பித்தல் மூலம் சபை அலுவலர் ஒருவரின் சான்றுபடுத்தல் இன்றி கோறிக்கை கடிதங்கள் மீது சேவை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | முறைப் பிரகாரம் கோறிக்கை கடிதம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தகன கூடத்தின் எரிவாயு பாவனை தொடர்பாக முறையான பதிவேடொன்ற தகன கூட பொறுப்பாளரினால் பேணிச் சென்றிருக்கவில்லை. | - மேற்படி - | முறையாக பதிவேடுகள் பேணப்பட வேண்டும். |
| (இ) | 2012 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை காணப்படுகின்ற ரூபா 1,901,097 தொகைக்கான 26 கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | மீதிகளை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான புனித மரியாள் வீதியில் 22 சிறு வியாபார கடையறைகள் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 16 கடையறைகள் தொடர்பாக உடன்படிக்கைகள் கையொப்பமிட்டிருக்கவில்லை. அதேபோல் துணை வாடகை வழங்கியிருந்த 03 கடையறைகள் தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | உரிய முறையில் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | பொதுச் சந்தையில் புதிய திறந்த 16 கடைகளுக்காக 2021 ஆண்டின் போது புதிய கடை வாடகை பெறுமதி மதிப்பீடு ஒன்று பெற்றுக்கொண்டு இருந்த போதிலும், அந்த புதிய கடை வாடகை பெறுமதி மதிப்பீட்டின் மீது உடன்படிக்கைகளுக்கு அணுகியிருக்கவில்லை. அதேபோல் துணை வாடகைக்கு வழங்கியிருந்த 06 கடைகள் தொடர்பான உடன்படிக்கையில் நிபந்தனை 25 இன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | உடன்படிக்கை நிபந்தனையின் படி செயற்பட வேண்டும். |
| (இ) | பொதுச் சந்தையின் 105 கடையறைகள் வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| i. | கடையறைகள் தொடர்பான உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 25 இன் படி வாடகையாளருக்கு கடையறையில் வியாபாரம் செய்ய முடியாத நிலைமையொன்று ஏற்பட்டால் ஒரு பஞ்சாங்க மாதத்திற்கு முன்னர் | - மேற்படி - | உடன்படிக்கைக்கு இணங்க கடையறைகளை மீண்டும் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | சபைக்கு அதுபற்றி அறிவித்து உடன்படிக்கையை இரத்துச் செய்து தனது வாடகையை முடிவுறுத்த வேண்டியிருந்த போதிலும், வாடகையாளர்களினால் 39 கடையறைகள் துணை வாடகைக்கு வழங்கப்பட்டிருத்தல் தொடர்பாக சபையினால் எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | | வேண்டும். |
| ii. | சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த 07 கடையறைகளை மீண்டும் வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | கடையறைகளை வாடகைக்கு கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iii. | 96 கடையறைகள் தொடர்பாக உடன்படிக்கைகளை மீண்டும் புதுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | உடன்படிக்கையை புதுப்படுத்த வேண்டும். |
| iv. | 01 மாதம் முதல் 29 மாதங்கள் வரை நிலுவையாக காணப்பட்ட கடை வாடகை ரூபா 5,379,493 தொகையினை அறவீடு செய்வதற்கு அல்லது வாடகை உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 03 மற்றும் 33 இன் படி செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | உடன்படிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | புதிய வர்த்தக கட்டிடத் தொகுதியின் 54 கடையறைகள் வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| i. | செல்லுபடியாகும் காலப்பகுதியை அறுதியாக குறிப்பிட்டிருக்காத உடன்படிக்கை மேற்கொண்டிருந்த ஆரம்பத் திகதி குறிப்பிடப்பட்டு காணப்பட்ட 35 கடையறைகளுக்காக குறிப்பிட்ட காலப்பகுதியை குறிப்பிட்டு புதிய உடன்படிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | உடன்படிக்கையை புதுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ii. | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி உடன்படிக்கைக் காலப் பகுதி முடிவடைந்திருந்த 11 கடையறைகளின் வாடகை உடன்படிக்கையை புதுப்பித்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| iii. | 12 கடையறைகள் தொடர்பாக 01 மாதம் முதல் 83 மாத கால வீச்சிலும் மற்றும் 02 கடையறைகள் தொடர்பாக நிலுவையான மாதங்களின் எண்ணிக்கையை இனங்கண்டு கொள்ள முடியாத ரூபா 480,003 தொகைக்கான நிலுவை வாடகைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | நிலுவை வாடகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iv. | கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்டிருந்த இடப் பரிசோதனையின் போது தரை மாடியில் 02 கடைகளும் முதலாம் மாடியில் 21 கடைகளும் நீண்ட காலமாக திறக்கப்படாமல் மூடியிருந்ததெனவும் அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | வரத்தகச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாத வியாபார நிலையங்களை மீண்டும் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தையின் 51 தரைச் சதுரங்கள் வாடகைக்கு கொடுத்தல் மற்றும் வாடகை அறவீடு செய்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| i. | உரித்தாக்கப்பட்டிருந்த 11 தரைச் சதுரங்கள் மீண்டும் டென்டர் மூலம் வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | மீண்டும் வாடகைக்கு கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ii. | 08 தரைச் சதுரங்கள் துணை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | உடன்படிக்கைக்கு இணங்க மீண்டும் உரித்தாக்கிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iii. | 25 வருடங்கள் முதல் 30 வருடங்கள் வரையான காலம் வாடகை உடன்படிக்கை காலவதியாகிய 12 தரைச் சதுரங்களுக்கு மற்றும் 2021 ஆண்டில் வாடகை உடன்படிக்கை முடிவடைந்திருந்த 02 கடைச் சதுரங்கள் தொடர்பாக மீண்டும் வாடகை உடன்படிக்கை புதுப்படுத்துவதற்காக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | வாடகை உடன்படிக்கை புதுப்பிக்கப்பட வேண்டும். |
| iv. | 23 தரைச் சதுரங்கள் தொடர்பாக 01 மாதம் முதல் 43 மாதங்கள் வரையான காலப் பகுதிக்கான நிலுவை மாதாந்த வாடகை ரூபா 139,853 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | நிலுவையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பொதுச் சந்தையில் 23 திறந்த கடையறைகளில் 10 கடையறைகள் துணை வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கையில் உடன்படிக்கைக் காலப் பகுதி முடிவடையும் திகதி குறிப்பிடப்பட்டிருக்காத 21 திறந்த கடையறைகள் மற்றும் வாடகைக்கு பெற்றவர்களுடன் உடன்படிக்கை மேற்கொண்டிருக்காத திறந்த கடையறை ஒன்றிற்காக மீண்டும் உடன்படிக்கை மேற்கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், 14 கடையறைகள் 01 மாதம் முதல் 46 மாதங்கள் வரையான நிலுவை கடை வாடகையின் கூட்டுத் தொகை ரூபா 264,632 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | உடன்படிக்கை மேற்கொள்வதற்கு மற்றும் நிலுவை கடை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 2018 ஆண்டின் போது அரச விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் அனுப்பியிருந்த பெறுமதி மதிப்பீட்டு பெறுமதிகள் குறிப்பிட்ட செல்லுபடியாகும் கால வரையறையை மிகைத்துக் காணப்பட்ட போதிலும் பொதுச் சந்தை கடையறைகள், புதிய வர்த்தக கட்டிடத் தொகுதியின் கடையறைகள் மற்றும் பொதுச் சந்தையின் தரைச் சதுரங்களுக்காக புதிய பெறுமதி மதிப்பீடு ஒன்றினை பெற்றுக்கொள்வதற்காக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடையறைகளுக்காக புதிய பெறுமதி மதிப்பீடு ஒன்று பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய காலத்தில் பெறுமதி மதிப்பீடுகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணங்கள் 757(2), 760 மற்றும் 102 இற்கு இணங்க 2022 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி முரண்பாடுகள், பற்றாக்குறைகள் மற்றும் காணாமல் போதல் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 103(1)(இ) இற்கு இணங்க முறையான விசாரணை ஒன்று நடாத்தி பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை தீர்மானிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் களஞ்சியப் | பதிலளிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டிதுடன் தகவல்கள் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | பொருட்களை பௌதீக பரிசோதனை மேற்கொண்டு பற்றாக்குறையின் பெறுமதி ரூபா 182,144 தொகை பெண் உத்தியோகத்தரிடம் அறவீடு செய்திருக்கவில்லை. | | வேண்டும். |
| (இ) | நட்டங்கள் சேதங்கள் பதிவேட்டின் படி 2022 ஆண்டின் போது நட்டங்கள் சேதங்கள் ஏற்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 391,882 தொகைக்கான 07 சந்தர்ப்பங்களுக்கான பெறுமதியில் 06 சந்தர்ப்பங்களுக்கான நட்டங்கள் சேதங்கள் தொடர்பான முறையான விசாரணைகள் மேற்கொள்ளல் அல்லது குறிப்பிட்ட உத்தியோகத்தர் எவரிடமும் கூற்றுக்கள் பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், 2023 ஆண்டிற்கான கூட்டுத்தொகை ரூபா 528,944 தொகைக்காக இரண்டு சந்தர்ப்பங்கள் தொடர்பாகவும் முறையான விசாரணைகள் நடாத்தி குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடம் நட்டத்தை அறவீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | முறையான விசாரணை நடாத்தி குறிப்பிட்ட சேத இழப்பினை ஈட்டிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2023 செப்தம்பர் 16 திகதி இலக்கம் LL-6408 கொண்ட டிபர் வண்டியின் 02 பட்டரிகள் காணாமல் போதல் தொடர்பாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நட்டங்கள் சேதங்கள் பதிவேட்டிலும் குறிப்பிடப்பட்டிருக்காததுடன், முறையான விசாரணை ஒன்று இன்றி ரூபா 138,300 இற்கான பெறுமதி பாதுகாப்புச் சேவைக் கம்பனியில் இருந்து அறவீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | முறையான விசாரணை ஒன்றின் பின்னர் நட்டங்கள் மற்றும் சேதங்கள் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | சபையினால் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த சேதங்கள் அல்லது நட்டங்கள் தொடர்பாகவும் நிதிப் பிரமானம் 104(1)(அ), நிதிப் பிரமாணம் 104(2) மற்றும் நிதிப் பிரமாணம் 104(4) இற்கு இணங்க ஆரம்ப அறிக்கை மற்றும் முழுமையான அறிக்கையும் தயாரித்திருக்கவில்லை. | - மேற்படி - | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.2.1(இ), 5.6.1(அ), 2.4.1, 2.4.1(அ), 2.3.2(ஆ), 2.3.2(இ), 2.6.1(அ)(i), (ii), (iv), 4.2.2(அ), 4.3.1(அ) ஆகிய வழிகாட்டல்களுக்கு முரணாக நகர சபை அலுவலத்தின் அலுவலக விடயங்களை கணினி மயப்படுத்துவதற்காக 09 மென்பொருள் முறைமைகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 9,387,500 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், கணக்காய்வுத் திகதியாகிய 2023 செப்தம்பர் 25 திகதி அளவிலும் இருப்புக்கள் மற்றும் களஞ்சிய முகாமைத்துவ மென்பொருள் முறைமை மற்றும் சம்பள முகாமைத்துவ மென்பொருள் முறைமை செயற்படு நிலையில் காணப்படாததுடன் அதற்காக செலுத்தியிருந்த ரூபா 655,000 தொகை மற்றும் ரூபா 865,000 தொகை விளைவற்ற செலவொன்றாக இருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | வழிகாட்டல்களுக்கு இணங்க செயற்பட வேண்டியதுடன், சபைக்குத் தேவையான மென்பொருள் தேவைப்பாடுகளை உரிய முறையில் இனங்கண்டு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.2.1(இ), 2.1.2(அ), 2.4.1, 2.4.1(அ), 2.3.2(ஆ), 2.3.2(இ), 2.6.1(அ)(i),(ii), 4.2.2(அ), 4.3.1(அ) மற்றும் 5.6.1(அ) ஆகிய வழிகாட்டல்களுக்கு முரணாக இணைய வழியாக கொடுப்பனவுக்கான செயலி ஒன்றை கொள்வனவு செய்தல் - மூன்றாம் கட்டத்தை செயற்படுத்துவதற்காக ரூபா 3,595,000 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன், முழுமையான பயிற்சி வழங்கப்படாத போதிலும் 25 சதவீத பெறுமதியை தடுத்து வைக்காமல் முழுத் தொகையையும் செலுத்தியிருந்தமையால் ரூபா 898,750 இற்கான முறைசாரா கொடுப்பனவு ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் கணக்காய்வுத் திகதியாகிய 2023 செப்தம்பர் 25 திகதி அளவில் மென்பொருள்களை பயன்படுத்தி குறிப்பிட்ட எதுவித கருமங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் செலவிடப்பட்டிருந்த ரூபா 3,595,000 இற்கான தொகையும் விளைவற்ற செலவொன்றாகியுள்ளது. | பதிலளிக்கப்படவில்லை. | வழிகாட்டல்களுக்கு இணங்க செயற்பட வேண்டியதுடன், உடன்படிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஜாஎல நகர சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 141 தொகையும், அத்திகதியில் உள்ளவாறான பதவியணி 111 தொகையும் காணப்பட்டதுடன், அதன்படி, 30 வெற்றிடங்கள் காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | சபையின் அலுவல்கள் செயற்திறனுடன் பேணிச் செல்லக்கூடியவாறு பதவியணியை செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஜனவரி 28 திகதிய இலக்கம் DMA/2009(1)(I) கொண்ட முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுச் சுற்றறிக்கைக்கு இணங்க மீளாய்வாண்டிற்கான சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 2 மாத்திரம் நடாத்தியிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க கூட்டங்கள் நடாத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |